**முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி**

2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது. பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில்குமார் | தந்தையின் பெயர்: | |
| ஜாதி : | | கிராமம் : | |
| தொழில்: | | வயது: | |

09.03.2023
OS 223/2021
PW1

வாதி தரப்பு சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. ஆவணப்பட்டியல் படி வாசாஆ 1 முதல் வாசாஆ 23 வரை குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

12.09.2023
OS 223/2021
PW1 – செந்தில்குமார்

வாதி தரப்பு சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

எனது அப்பா, அம்மா எப்போது இறந்தார்கள் என்று எனக்கு தேதி சரியாக ஞாபகம் இல்லை. எனது அப்பா மற்றும் அம்மா இருவரும் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வந்த நிலையில் தான் காலமானார்கள் என்றால் சரி. எனது அம்மா வீட்டு குடித்தனம் என்றால் சரி. எனது அப்பா விவசாய வேலை செய்து வந்தார் என்றால் சரி. எனது அப்பா இறந்த காலத்தில் எனக்கு 17 வயது என்றால் எனக்கு 23 இருக்கும். அப்போது எனது தம்பிக்கு 14 வயது என்றால் இல்லை அவருக்கு 22 வயதாகி இருந்தார். நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். எனது தம்பியும் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் அப்பா இறந்த நேரத்தில் எங்களது மூத்த சகோதரிக்கு திருமணம் முடிந்து இருந்தது. அம்மா காலமானபோது 1 ம் பிரதிவாதி மற்றும் 2 ம் பிரதிவாதிக்கு திருமணம் முடிந்து இருந்தது. என் அப்பா தான் முதலில் காலமானார், அதன் பின் எனது அம்மா காலமானார். எனது அப்பா இறந்த காலத்தில் நாங்கள் சிறுவயதினராக இருந்தோம் என்றால் தவறு. மொத்த குடும்ப பாரத்தையும் ஒன்றிணைந்து பிரதிவாதிகள் தான் பொறுப்பேற்று அவர்கள் சம்பாத்தியத்தில் தான் குடும்பத்தை நடத்தி வந்தார்கள் என்றால் பொறுப்பு மட்டும் தான் பார்த்தார்கள். சம்பாத்தியம் என்பது சாராயம் விற்று வாங்கினார்கள். சாராயம் விற்று தான் 1, 2 ம் பிரதிவாதிகள் சொத்து வாங்கினார்கள் என்ற விவரத்தை எனது வழக்குரையில் கூறிஉள்ளேன். எனது அம்மாவிற்கு சக்கரை வியாதி இருந்து நீண்டகாலம் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. எனது அம்மா மற்றும் அப்பாவின் சிகிச்சைக்காக பெருமளவில் மருத்துவ செலவு ஏற்பட்டது என்றால் சரி. அந்த செலவுகளை 1, 2 ம் பிரதிவாதிகள் அவர்களது சம்பாத்தியத்தில் தான் செலவு செய்தார்கள் என்றால் தவறு, பொது செலவாக தான் செய்து வந்தார்கள். அவர்கள் இருவருக்கும் தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது. 1, 2 ம் பிரதிவாதிகள் பல்வேறு தொழில்கள் செய்து வந்தார்கள் எனவும், கிராமத்தில் அவ்வபோது நிலங்களை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றும் அவர்களது உழைப்பில்

தான் குடும்பம் நடந்தது என்றால் அனைத்தும் பொய். எனது அம்மாவிற்கு நிறைய வைத்திய செலவு ஆன நிலையில் கீழ முல்லக்குடி சர்வே எண். 47/39 என்ற நிலத்தை Slum clearance board ல் அடமானம் வைத்து கடன் வாங்கி மருத்துவ செலவு செய்துவிட்டு அஸ்திவாரம் மட்டும் போடப்பட்டது என்றால் பொய். எனது அப்பா மற்றும் அம்மா இறந்த பிறகு மேற்படி சர்வே எண்ணில் 1, 2 ம் பிரதிவாதிகளின் சம்பாத்தியத்தில் தான் வீடு கட்டப்பட்டது என்றால் தவறு. அவர்களுக்கு சம்பாத்தியம் கிடையாது. மின் இணைப்பு, வீட்டு வரி அனைத்தும் 1 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டது என்றால் தவறு. எனது திருமணம் 2004 ம் ஆண்டு நடந்தது என்றால் சரி. எனது திருமணத்தை 1, 2 ம் பிரதிவாதிகள் நடத்தினார்கள் என்றால் தவறு, அது பொதுப்பணம் தான். ஒரே தேதியில் எனக்கும் 2 ம் பிரதிவாதிக்கும் ஒரே மேடையில் திருமணம் ஆனது என்றால் சரி. எங்களது திருமணத்திற்காக எங்கு பணம் வைத்திருந்தார்கள் என்றால் 1, 2 ம் பிரதிவாதிகள் நான் சாராயத்தில் சம்பாதித்து கொடுத்த பணத்தை 1 ம் பிரதிவாதி கோடி கணக்கில் பணம் டெபாசிட் செய்து வைத்திருந்தார். அந்த கால கட்டத்தில் நான் ஒரு நாளைக்கு சாராயம் விற்று ரூ.50000/- பணத்தை 1, 2 ம் பிரதிவாதிகள் வசம் கொடுத்து வந்தேன். மேற்படி விவரத்தை நான் எனது பிராதில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எனது திருமணத்திற்கு சுமார் 2, 3 இலட்சம் செலவாகி இருக்கும் என்றால் தவறு. திருமண செலவு 2 இலட்சம் ஆகிற்று. 8 கிராமில் தாலி எடுப்பதற்கு பதில் 2 கிராமில் எடுத்தார்கள். மேற்படி விவரத்தை நான் எனது பிராதில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. எனது தங்கை விமலாவிற்கு எப்போது திருமணம் ஆனது என்று சரியாக தெரியவில்லை. 2008 ம் வருடத்தில் விமலா 4 ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆனது என்றால் சரி. விமலாவின் திருமணத்திற்கு 1, 2 ம் பிரதிவாதிகள் ரூ.5 இலட்சம் செலவு செய்தார்கள் என்றால் சரி. 2012 ம் வருடத்தில் கனிமொழிக்கு திருமணம் ஆனது என்றால் சரி. விமலாவின் திருமணத்திற்கு 1, 2 ம் பிரதிவாதிகள் பல இலட்சம் செலவு செய்தார்கள் என்றால் அதை விட கொஞ்சம் கம்மியாக செலவு செய்தார்கள். நானோ எனது தம்பியோ உருப்படியாக எந்த வேலையும் செய்தது கிடையாது என்றாலும், பொறுப்பில்லாமல் இருந்து வந்தோம் என்றாலும் பொய். நான் தற்போது ஆட்டோ ஓட்டி வருகிறேன் என்றாலும் ஸ்ரீரங்கத்தில் வசிக்கிறேன் என்றாலும் சரி. எனது தம்பியும் ஆட்டோ ஓட்டி திருவாணை கோவிலில் வசிக்கிறார்

என்றால் சரி. 1, 2ம் பிரதிவாதிகள் ஆரம்ப காலத்தில் எனக்கு ஆட்டோ வாங்கி கொடுத்தார்கள் என்றாலும், அதை நான் விற்று விரையம் செய்துவிட்டேன் என்றால் தவறு. தற்போது நான் ஓட்டி வரும் ஆட்டோ என் உழைப்பில் வாங்கியது ஆகும்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

02.11.2023
OS 223/2021
PW1 – செந்தில்குமார்

வாதி தரப்பு சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதிகள் எனக்கும் இரண்டாம் வாதிக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். எனக்கு முதலில் ஆண் குழந்தை பிறந்தது. எங்களது திருமணத்தின் போது எனது மனைவிக்கு பிரதிவாதிகள் 3 பவுன் தங்க செயின் போட்டார்கள் என்றால் சரி. எனக்கு முதல் குழந்தை பிறந்த போது பிரதிவாதிகள் 1 பவுன் தங்கம் கொடுத்தார்கள் என்றால் இல்லை, 1 கிராம் பவுன் தான் கொடுத்தார்கள். 2012 ம் வருடம் எனக்கு ஒரு ஆட்டோ வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரி, ஆனால் அந்த ஆட்டோ காலாவதியான ஆட்டோ, கடமைக்காக வாங்கி கொடுத்தார்கள். ரூ.68 ஆயிரத்திற்கு வாங்கப்பட்டது என்றால் தவறு, ரூ.25 ஆயிரத்திற்கு வாங்கப்பட்டது. அவ்வாறு எனக்கு வாங்கி கொடுத்த ஆட்டோவை ரூ.100 க்கு 2 1/2 சதவீதம் வட்டிக்கு வாங்கி கொடுத்தார்கள் என்றால் இல்லை. 2 ம் வாதிக்கு திருமணத்தின் போது எனக்கு கொடுத்ததை போலவே பிரதிவாதிகள் 2 ம் வாதிக்கும் நகை கொடுத்தார்கள் என்றால் சரி. மேற்படி 2 ம் வாதிக்கு குழந்தை பிறந்தவுடன் பிரதிவாதிகள் 1 பவுன் தங்க செயின் கொடுத்தார்கள் என்றால் இல்லை, 1 கிராம் பவுன் தான் கொடுத்தார்கள். அந்த சமயத்திலும் ரூ.50 ஆயிரம் கடன் ரூ.100 க்கு 2 1/2 வட்டி என்ற முறையில் வாங்கி செலவு செய்தார்கள் என்றால் தவறு, அந்த பணம் எங்களுடையது, பொறுப்பு மட்டும் தான் பிரதிவாதிகளுடையது. திருவெறும்பூர் காவல் நிலையத்தில் 1, 2 பிரதிவாதிகளின் மனைவிகளை நானும் 2 ம் வாதியும் சேர்ந்து கத்தியால் தாக்கி காயத்தை ஏற்படுத்தியதாக எங்களுக்கு எதிராக குற்ற எண். 258/2008 என்ற எண்ணில் வழக்கு பதியப்பட்டது என்றால் தவறு. மேற்படி வழக்கு JM No.6, Trichy யில் நடத்தப்பட்டு பின் இருதரப்பினரும் சமாதானம் ஆகிக்கொண்டோம் என்றால் சரி. அந்த சண்டையில் இருந்து தான் இன்று வரை பிரச்சனை. நானும் 2 ம் வாதியும் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்று திருவாணை கோவிலில் தனித்தனியாக குடும்பம் நடத்தி வருகிறோம் என்றால் சரி. திருவாணை கோவில் சென்ற பிறகு பிரதிவாதிகளை அடித்து மிரட்டி சொத்தை பறிக்க முயற்சி

செய்தோம் என்றால் தவறு. 2ம் வாதிக்கு ஒரு அரசியல் வாதி மூலம் இரயில்வேயில் வேலை வாங்கி தருவதாக சொல்லி பிரதிவாதிகள் ரூ.60000/- 2ம் வாதியிடம் கொடுத்து அந்த பணம் இன்றைய தேதி வரை பிரதிவாதிகள் பெறவில்லை என்றால் சரி. மேற்படி வேலை கிடைக்காததால் 2ம் வாதிக்கு பிரதிவாதிகள் சென்னை சில்க்ஸ்ல் வேலை வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரி. அந்த வேலையையும் 2ம் வாதி சரியாக செய்யாமல் விட்டுவிட்டார் என்றால் சரி. ஆரம்ப காலத்தில் இருந்தே நானும் 2ம் வாதியும் சரியாக சம்பாதிக்காமல் இருந்து வந்தோம் என்றால் பொய். பிரதிவாதிகள் பெயரில் இருக்ககூடிய சொத்துகள் அனைத்தும் அவர்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றாலும் அதில் எனக்கும் 2ம் வாதிக்கும் எந்த பங்கும் இல்லை என்றால் தவறு. பிரதிவாதிகள் பெயரில் உள்ள சொத்துகள் அனைத்தும் பிரதிவாதிகள் தங்கள் சொந்த உழைப்பைக்கொண்டு வாங்கினார்கள் என்றால் தவறு. மேற்படி பிரதிவாதிகள் சொத்துகளை வாங்குவதற்கு பூர்வீக சொத்துகள் எதுவும் இல்லை என்றால் சரி. நாங்கள் சம்பாதித்து பிரதிவாதிகளுக்கு கொடுத்தோம் என்று சொல்வது பொய் என்றால் இல்லை. நான் கோரிஉள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் தவறு.